வளன்ஆயம்
தொழிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# குழந்தை இலக்கியம் : எஸ்.ரா.வின் பங்களிப்பு

**முனைவர் போ. ஜான்சன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 002, 9843160719, johnsonn1988@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

குழந்தைகளுக்காகக் குழந்தைகளின் மனநிலையில் படைத்தளிப்பது குழந்தை இலக்கியம். உலகின் சூழலுக்கு ஏற்ப குழந்தைகளின் மனநிலையில் மாற்றம் அடைந்து வருவதையும்,அம்மாற்றம் அவர்களுக்கான இலக்கியங்களாக அல்லாமல் புறச்சூழல்களால் அமைகின்றன என்பது வருத்தத்திற்குரியது. அதிலிருந்து அவர்களை விடுவித்து புத்தக உலகில் இலக்கியங்களோடு இணைக்கும் முயற்சியில் பலரும் முயன்று வருகின்றனர். அந்த வகையில் குழந்தை இலக்கியப் படைப்பாளராகத் தன்னை இணைத்துக்கொண்டு அவர்களையும் தன்னுடைய வாசகர் வட்டத்தில் இணைத்திருக்கும் எஸ்.ராமகிருஷ்ணனின் படைப்புகள் பற்றியும் அப்படைப்பின் உருவமும் உள்ளடக்கமும் குழந்தைகளுக்கு ஏற்றாற்போல் அமைந்திருக்கின்றனவா? என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

எஸ்.ரா.வின் பங்களிப்போடு அவருக்கு முந்தைய இலக்கியப் படைப்பாளர்களும், அவர்களின் முன்முயற்சியும் இங்குக் குறிப்பிடுவது சாலச்சிறந்தது என்ற அளவில் அவர்களைப் பற்றிய செய்திகளும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

**குறிப்புச்சொற்கள்**

குழந்தை இலக்கியம் - சமூகம் - பண்பாடு – பெருவெளி – ஊடகம் - உருவம் - உள்ளடக்கம் - விழுமியங்கள்

**முன்னுரை**

குழந்தை இலக்கியத் தடத்தில் முதன்மை இலக்கு குழந்தைகளே. அவர்கள் நன்முறையில் வளர்க்கும் திட்டமே அனைத்திலும் பெரிய திட்டம். இதற்கான பணிகளில் நாளும் தங்களைக் கரைத்துக்கொண்டு அதற்காகவே உழைக்கும் பல்வேறு படைப்பாளர்கள் இங்கு உண்டு. ஒவ்வொரு நல்ல புத்தகத்தின் பின்னாலும் ஒரு நல்ல ஆசிரியர் மறைந்து நிற்கிறார் என்பார்கள். அவ்வாறான ஆசிரியர்களாகக் குழந்தை இலக்கியப் படைப்பாளர்களை இனங்காணலாம். யார் கூறும் அறவுரையைக் காட்டிலும் தானே முயற்சியெடுத்து படிக்கின்ற போது அந்நூலுக்குள் மறைந்திருக்கும் ஆசிரியரின் அறவுரை குழந்தைகளின் மனதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அவ்வாறான மாற்றம் குழந்தைகளின் வாசிக்கும் பழக்கத்திலேயே தொடங்குகிறது என்பது கண்கூடு.

சிறு வயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தைக் கற்றுத்தர வேண்டிய சமூகமாக இச்சமூகம் மாறவேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை உடனடியாகத் தொடங்கவேண்டும். அது குழந்தைகளுக்கான இலக்கியத்திலிருந்தே துவங்க முடியும். எனவே அவ்விலக்கியங்களின் அறிமுகத்தோடு அதன் வளர்ச்சி, அதனை வளர்த்தெடுத்த பங்களிப்பாளர்கள், அவர்களுள் எஸ். ராமகிருஷ்ணன் என்ற படைப்பாளரின் படைப்பு வெளி, அவரின் குழந்தை இலக்கியப் படைப்பின்ன உருவமும் உள்ளடக்கமும் என விரிவான கண்ணோட்டத்துடன் இக்கட்டுரை அமைகிறது.

**குழந்தை இலக்கியம்: அறிமுகம்**

மழலையர் அறிவு வளர மொழி வளரும், நலம் வளரும், நாடு வளரும், நல்லரசு நிலவும் என்பார் கவிஞர் வாணிதாசன். குழந்தை இலக்கியம் என்பது குழந்தைகள் படிப்பதற்கு என்று எண்ணம் இருத்தல் ஆகாது. குழந்தைகள் பற்றி எழுதுவது குழந்தை இலக்கியம் ஆகாது. அவர்கள் படிப்பதற்கு ஏற்றன போல அமைப்பது ஆகும்.

குழந்தைகளுக்கான இலக்கியத்தை முதன்முதலில் விதைத்தவர் கவிமணி தேசிய விநாயகம் ஆவார். 1901இல் குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடினார். அதன்பின் 1915இல் பாப்பா பாட்டு எழுதினார் பாரதி. அதன்பிறகு பலரும் இத்துறையில் ஆர்வம் காட்டினர். இதனை எழுதுவதற்குப்

பொறுப்பும்,புலமையும் இருத்தல் வேண்டும். இந்த இலக்கியங்களிலும் சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் போன்றன அமைந்துள்ளன.

குழந்தைமொழி என்பது அவர்களுக்கானது. அவர்களுடைய உடன்பாட்டின் மொழி. விளையாட்டு மொழி. குழந்தை இலக்கியம் என வரையறுக்கப்படுவது குழந்தைகளைக் கவரும் வெறும் கதைகளாக மட்டுமல்லாமல் அவர்களுக்கு நன்னெறி சார்ந்தும், உணர்வுகள் சார்ந்தும், பழக்கவழக்கங்கள் சார்ந்தும் அமைதல் அவசியம். கவிஞர் அப்துல் ரகுமானின் கவிதை ஒன்று குழந்தைகளின் மனநிலையைப் புரிந்துகொள்ள வழிவகை செய்தது.

**பித்தன் மழைக்காகப் பள்ளிக்கூடத்தில்**
**ஒதுங்கினான்**
**குழந்தைகளின் கையிலிருந்த**
**புத்தகங்களைப் பார்த்து**
**புத்தகங்களே சமர்த்தாயிருங்கள்**
**குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள் என்றான்**

**(அப்துல் ரகுமான்,பித்தன்)**

என்ற கவிதைக்கு ஏற்ப குழந்தைகள் மீதான உண்மையான அக்கறையோடு இன்றைய இலக்கியங்கள் படைக்கப்படுகின்றனவா? என்ற வினாவே நாம் எதிர்கொள்ள நேர்கிறது. குழந்தைகளுக்கான இலக்கியம் படைக்கும் எழுத்தாளன் சில நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பார் ஜெயமோகன் (https://www.jeyamohan.in/141030/)

- சிறுகுழந்தைகளுக்கான நூல்கள் பெரிய எழுத்தில் அச்சிடப்படவேண்டும்
- ஒரு சொற்றொடரில் ஏழு சொற்களுக்கு மேல் இருக்கக் கூடாது
- ஆயிரம் சொற்களுக்குள் அல்லது இருநூறு வார்த்தைகளுக்கு மேல் கதை அமைதல் கூடாது
- வளரும் குழந்தைகளுக்கான கதைகளில் ஒரு சொற்றொடரில் பன்னிரண்டு வார்த்தைகளுக்கு மேல் இருக்கலாம். மூவாயிரம் சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.

- இவ்வாறாக வயதிற்கு ஏற்றாற்போல கதையின் சொற்களையும், அளவையும், உள்ளடக்கத்தையும் கவனித்தல் வேண்டும். அதோடு நவீனத்தையும் அறிவியலையும் புகுத்த வேண்டும்.
- நம்ப இயலாத, அறிவியலுக்கு மாறான எந்தவொரு கதைகளும் குழந்தையின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**குழந்தைகளின் வாசிப்பனுபவம்**

இன்றைய நவீனமயமாக்கல் சூழலில் குழந்தைகளின் வாசிப்பும் குறைந்துகொண்டே வருகிறது. அதற்கு இரு காரணங்களைச் சுட்டலாம். அவை, பெருவெளி ஊடகம், பயிலும் கூடங்கள்.

பெருவெளி ஊடகத்தின் மூலம் பள்ளி செல்லும் குழந்தைகள், அதற்கு முந்தைய வயதிலிருந்தே அதற்குள் மூழ்கிவிடுவது இதற்கான ஒரு பெரிய குறைபாடு. அதனால் வாசிப்பு என்ற பழக்கம் வேரில்லாத மரம்போன்று தொடக்கத்திலேயே காய்ந்து கருகிப்போகிறது.

பயிலும் பள்ளிக்கூடங்கள் பலவும் நூலகம் என்ற பயன்பாட்டை ஊக்குவிக்க மறந்ததன் விளைவும் இதற்கு மற்றொரு பெரிய காரணம். நூலகத்திற்குச் செல்லும் பழக்கமும், நூல்களை எடுத்து வாசிக்கும் பழக்கமும் மறந்தே போய்விட்டனர் இன்றைய தலைமுறையினர் பலர். வெறும் தேர்வுநோக்கிற்காக மட்டுமே நாம் அவர்களைத் தயார்படுத்துகிறோம். சில நிறுவனங்களில் நூலகமே இருப்பதில்லை. இவ்வாறான சூழலில் வாசிப்பு என்பது குழந்தைகள் மட்டத்தில் வெகுவாகக் குறைந்துவிட்டது.

குழந்தை இலக்கியம் படைப்பதற்கான படைப்பாளர்களும் இன்று வெகுவாகக் குறைந்துவிட்டார்கள். அவர்களுக்கான பதிப்பகங்களும் இன்று இல்லை. புத்தகச் சந்தையில் இன்று பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் மற்றும் கொடுக்க நினைக்கும் பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையாக உள்ளன. தங்களின் உயர்வை அது காட்டும் என்ற வெகுசன மக்களின் மனநிலையை இங்குக் காணமுடிகிறது. இதனாலும் குழந்தை இலக்கியம் மட்டுப்படுகிறது.

இம்மாதிரியான காரணங்களால் முழுமையாகக் குழந்தை இலக்கியங்களே தமிழில் வரவில்லை என்றோ, குழந்தை இலக்கியப்

படைப்பாளர்கள் இல்லை என்றோ சொல்வதற்கில்லை. இதற்காக பல்வேறு தனிநபர்களும், நிறுவனங்களும் உழைத்துக்கொண்டே இருக்கின்றனர்.

## குழந்தை இலக்கியப் படைப்பின் வகைப்பாடு

முன்னைய காலத்தில் நம்முடைய புராணங்களும், பேய்க்கதைகளும் பெரியோர்களால் சொல்லப்பட்டு வந்தன. அதன் தொடர்ச்சியாக சாவி மற்றும் சிலர் நவீனமாகச் சிந்தித்துத் தம்முடைய படைப்புகளைக் குழந்தைகளுக்காக வெளியிட்டனர். அவ்வாறான கதைகளில் சிந்தனையைத் தூண்டுவதற்கும் அதேநேரத்தில் நற்சிந்தனை போதிப்பதும் அவசியமாகிறது. சிலருக்குச் சில கதைகளில் ஆர்வம் இருப்பினும் அதனையே தொடர்ந்து கேட்கும்போதும், வாசிக்கும்போதும் அவை சலிப்பை ஏற்படுத்தலாம். எனவே காலத்திற்கு ஏற்றாற்போல் கற்பனையைக் கலந்து புதுமையாகச் சிந்திக்கும் கதைகள் வெளிவந்துள்ளன.

- அறிவியல் புனைவு கதைகள்
- பஞ்சதந்திரக் கதைகள்
- ஓருழவன் கதை
- இராமாயண, மகாபாரதக் கதை
- இறைமை தங்கிய கதைகள் (மதபோதனை)

இதுபோன்று ஏராளமான வகைப்பாடுகளில் குழந்தைகளுக்கான கதைகளை வகைப்படுத்தலாம்.

## குழந்தை இலக்கியப் படைப்பாளர்கள்

தாத்தா பாட்டிகளிடம் கதை கேட்க முடியாத குடும்பச் சூழலில் அச்சுக்கலை வளர்ந்து வந்து சிறார்களுக்கான இலக்கிய வேட்கையைத் தீர்ப்பதாக அமைந்தது. கவிமணி தேசிய விநாயகம் தொடங்கி பாரதி, பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, மின்னூர் சீனிவாசன் போன்றோர் குழந்தை இலக்கியம் படைக்கத் தொடங்கினர். அதன்பிறகு தமிழ்ப் பாடநூல்களை எழுதிய நமச்சிவாயம், மயிலை சிவமுத்து, திருநாவுக்கரசு, மு.வரதராசன் ஆகியோர் அந்நூல்களில் குழந்தைகளுக்கான படைப்புகளைப் படைத்தளித்தனர்.

குழந்தைகளுக்காக மட்டுமே முழுமூச்சாக எழுதியவர் அழ. வள்ளியப்பா. 1950ஆம் ஆண்டுகளில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவி, சிறார் இலக்கியம் வளர்ந்து வருவதற்கான தளத்தை ஏற்படுத்தினார். 'சிறார் பூக்கள்' உள்ளிட்ட பல பாடல்களைப் படைத்தவர் அழ. வள்ளியப்பா. அதன்பிறகு கூத்தபிரான், வாண்டு மாமா, ந. தெய்வசிகாமணி, மாயூரன் என குழந்தை இலக்கியப் படைப்பாளர்களின் வரிசை நீண்டது.

1947 முதல் 1955 வரை வெளியான பல்வேறு இதழ்கள் குழந்தைகளுக்கான இதழ்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவைகள் பல ஆயிரம் பிரதிகளைத் தாண்டி விற்பனையில் வரலாற்றுச்சாதனை நிகழ்த்தியது. அவற்றுள் கண்ணன், அணில், கரும்பு,அம்புலிமாமா, கோகுலம் போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றின் உள்ளடக்கங்களாக, அறிவியல், வரலாறு, சமூகம் சார்ந்த பால்கள், சிறுகதைகள், நாவல்கள், வாழ்க்கை வரலாறு, பொது அறிவு, துப்பறியும் கதைகள் என அனைத்தும் சார்நது வெளிவந்துள்ளன நோக்கத்தக்கது.

இதுபோன்ற இதழ்களில், ராஜாஜி, கா. அப்பாதுரையார், நாரண துரைக்கண்ணன், அகிலன், ஆர்.வி., ரா.கி. ரங்கராஜன்,கு. அழகிரிசாமி, அரு.ராமநாதன், துமிலன், ஜெயகாந்தன், ரா. பொன்ராசன், தங்கமணி, பூரம், புவி வேந்தன், வி.ரா. வசந்தன், தமிழ்வாணன், வை. கோவிந்தன், பூவை அமுதன், வெ. நல்லதம்பி, லூர்து சங்கீதராஜ், மெர்வின், பெ.நா. அப்புஸ்வாமி, நாகை தருமன், ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,குழ. கதிரேசன் மற்றும் இதுபோன்ற பலரும் குழந்தை இலக்கியத்திற்குப் பங்களிப்பு செய்தவர்களில் மிக முக்கியமானவர்களாவர்.

**எஸ்.ரா.வின் பங்களிப்பு**

குழந்தைகளுக்கான கதைகள் பல வகையுண்டு. அவர்களுக்கும் தெரிவுகள் நிறைய இருக்கவேண்டும். மிகைக்கற்பனைக் கதைகள், சாகசக் கதைகள், அறிவியல் கதைகள், நீதிக்கதைகள், புதிர் கதைகள், வேடிக்கைக் கதைகள் என நீண்டு செல்கிறது. மேற்கூறப்பட்ட பகுப்புகளைக் கொண்டே குழந்தைகளுக்கான இலக்கியத்தில் எம்மாதிரியான வகைமையைச் சேர்க்கலாம் என்பது முடிவாகிறது.

குழந்தைக் கதைகளிலும் வயது சார்ந்த பிரிவினை உண்டு. அவர்களுக்கு ஏற்றாற்போல் கதைகளின் மொழிநடை, அமைப்பு, படங்கள் இணைத்தல் போன்றவை வரையறை செய்யப்படுகிறது. இந்த அமைப்பைக் கொண்டே மேலைநாடுகளில் சில வரையறைகள் உருவாக்கப்பட்டு அதன்படி சிறுவர்களுக்கான கதைகளை எழுத்தாளர்கள் படைக்கின்றனர். அந்தவகையில், மிகைக் கற்பனையாகக் கதை எழுதிய ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன், “தேவதைக் கதைகள்” என்பதைப் படைத்தார். அதேபோல, ராபின்சன் கரூஸோ, சாகசக் கதைகளையும், லூயிஸ் கரோலின் ஆலிசின் அற்புத உலகம், சந்த் எக்ஸ“பரியின் குட்டி இளவரசன் போன்றன குறிப்பிடத்தக்கது.

தமிழிலும் தொன்றுதொட்டு குழந்தை இலக்கியங்கள் இருந்துள்ளன. மகாபாரதத்தின் பல உட்கதைகள் குழந்தைகளுக்கானதே ஆகும். ஆனால், நவீனக் கல்வி முறையால் தமிழ்க்கல்வி மறுக்கப்பட்டதன் விளைவால் தமிழில் படைப்பவர்கள் அவர்கள் எழுதிய நூல்களை வெளியிட விரும்பாத சூழலில் எஸ். ராமகிருஷ்ணன் போன்றோரின் அயராத உழைப்பாளும், சீரிய நடையாலும் மீண்டும் தமிழில் குழந்தைகளுக்கான இலக்கியம் புத்துயிர் பெற்றுள்ளது.

**உருவவியல்**

இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகளில் மிகப் பரவலாகச் செல்வாக்கு பெற்றிருப்பது உருவவியல் அணுகுமுறை. படைப்பின் வடிவத்தையும் அதன் நேர்த்தியையும் ஆராய்கிற இந்நிலை மேலை நாடுகளில் தோன்றி வளர்ந்தது. ஆனால் தமிழ்நாட்டில் உருவத்தின் அழகையும், உத்தியையும் பார்க்கின்ற பார்வை நீணட நாளாக இருந்துள்ளது.

உருவம் என்பது இலக்கியத்திற்கு வடிவத்தையும், அழகையும் தருவதாகும். இலக்கியத்தை வாசிக்க எதிர்ப்படும்போது அல்லது ஆராய முற்படும்போது முதலில் எதிர்படுவது உருவமே ஆகும். உருவத்தை முதன்மையாகக் கொண்டே திறனாய்வு வகைகள் பலவும் வளர்ந்திருக்கிறது.

“உருவம் என்பது உறுப்புகளின் ஒன்றிணைந்த செயல்பாடுகளின் வெளிப்பாடு: அது நடையியல் உத்திகளின் ஒரு ஒட்டுமொத்தமாம் என்பார்” ஷ்க்லோவ்ஸ்கி.மேலும் ரோமன் யோகோப்சன் என்பவர் “இலக்கிய ஆராய்ச்சியின் உண்மையான தளம் இலக்கியம் அல்ல; ஆனால்

இலக்கியத்தனமே (Literariness) ஆகும். அதாவது குறிப்பிட்ட ஒரு படைப்பை எது – எந்தப்பண்பு - இலக்கியமாக ஆக்கியிருக்கிறது என்பதேயாகும்" என்று வரையறை செய்கிறார் (https://www.tamilvu.org/courses/degree/d061/d0612/html/d0612441.htm).

இலக்கியம் என்பது முக்கியமாக ஓர் உருவமே என்றும், திறனாய்வு உள்ளிட்ட இலக்கிய அறிவியல் என்பது இத்தகைய கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு உருவத்தின் பல்வேறு கூறுகளையும் பண்புகளையும் அறிவார்ந்து புலப்படுத்த வேண்டும் என்றும் உருவவியல் வலியுறுத்துகிறது.

**எஸ்.ரா. நூல்களில் உருவம்**

நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள எஸ்.ரா. அவர்களின் படைப்புகள் அனைத்தும் மிகச்சிறப்பானவை. அவற்றுள் குழந்தைகளின் மனவோட்டத்தையும், படிக்கும் திறனை மேம்படுத்தவும் மேலும் சிந்திக்கவும் பல்வேறு வகையில் படைத்தளித்துள்ளார். குழந்தைகள் படிப்பதற்கு ஏற்ற எழுத்தளவும், அவர்கள் பெரிதும் தூக்கிச் சுமக்கும் அளவில் பக்க வரையறையும், எளிதாகப் புரிந்துகொள்ளும் தன்மையில் கதைத் தலைப்புகளும், அட்டைப் படங்களும் கொண்டு மிகச்சிரத்தையோடு ஒவ்வொரு நூலினையும் கொணர்ந்துள்ளார். ரோமன் யாகோப்சன் குறிப்பிடுவது போல, எஸ்.ரா.வின் இலக்கியத் தன்மை வேரூன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.ரா.வின் படைப்பு – உள்ளடக்கம்**

குழந்தை இலக்கியப் படைப்பாளர் என்பவன் குழந்தைகளோடு ஓடி ஆடி குழந்தைகள் பேசுவதைப் பேசி, குழந்தையாக மாறினால்தான் தரமான குழந்தை இலக்கியத்தைப் படைக்க முடியும். குழந்தை இலக்கியம் என்பது சொற்களின் கலை அதாவது சமூகக் கலாச்சாரத்தின் ஒரு பகுதி மொழியின் மூலமே குழந்தை இலக்கியம் கட்டமைக்கப்படுகிறது. மொழியானது குழந்தைகளுக்குச் சிக்கலைத் தருவதாகவோ, புரிந்துகொள்ள இயலாததாகவோ அமைதல் கூடாது. அது குழந்தையின் வயது, புரிந்துகொள்ளும் திறன், தேவை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

குழந்தைகளுக்கான இப்படைப்புகள் மூலம், அழகியல் செயல்பாடு, அறிவாற்றல், ஒழுக்கச் செயல்பாடு, சமூக விழுமியங்கள், கற்கும் செயல்பாடு போன்றன ஊக்குவிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இச்செயல்பாடுகள் எஸ்.ரா.வின் குழந்தைகளுக்கான இலக்கியப் படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவரின் படைப்புகள் சிலவற்றைக் காணலாம். அவை,

- கால் முளைத்த கதைகள்
- விலங்குகள் பொய்சொல்வதில்லை
- அக்கடா
- அபாய வீரன்
- வெள்ளை ராணி
- எனக்கு ஏன் கனவு வருது
- எலியின் பாஸ்வேர்டு
- எழுதத்தெரிந்த புலி
- கற்பனைக் குதிரை
- சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்
- தலையில்லாத பையன்
- கிறுகிறு வானம்
- நீள நாக்கு
- சிரிக்கும் வகுப்பறை
- நீலச்சக்கரம் கொண்ட மஞ்சள் நிறப்பேருந்து
- முட்டாளின் மூன்று தலைகள்
- ஆலிஸின் அற்புத உலகம் (மொ.பெ.)

போன்ற நூல்களின் உள்ளடக்கம் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும், கதை சொல்லும் விதத்தில் படைப்பாளர்களை உருவாக்கவும் முனைந்துள்ளார் எஸ். ராமகிருஷ்ணன்.

**இறுதியாக,**

குழந்தை இலக்கியப் படைப்பு என்பது ஒரு சவாலானதாகவும், புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகவும் அமைந்துள்ளது. குழந்தைகளுக்கான படைப்பு என்பது சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டதா? என்பது தொடங்கி, அவற்றின் உள்ளடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதாக இக்கட்டுரை விளக்குகிறது. தொண்ணூறுகளின் இடைப்பட்ட பகுதியில் தொடங்கி இன்றளவும் குழந்தைகளுக்கான படைப்புகள் என்பது வடிவத்திலும், வகைமைகளிலும் எவ்வாறாக மாறுபட்டுள்ளன. அவற்றிற்கான காரணம். குழந்தை இலக்கியப் படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளை வெளிக்கொணராமைக்கான காரணம் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் இக்கட்டுரை பதிவு செய்கிறது.

குழந்தை இலக்கியப் படைப்பின் உள்ளடக்கமாக ஜெயமோகன் குறிப்பிட்ட விதிமுறைகளில் எஸ்.ரா.வின் படைப்பு ஒத்ததாக அமைகிறது. எஸ்.ரா.வின் படைப்புகளில் குறிப்பாகக் குழந்தை இலக்கியப் படைப்புகளில் உள்ள உருவம், உள்ளடக்கம், குழந்தைகளின் எண்ணத்தையும், மனத்தையும் தூய்மையாக்கும். அவர்களுக்குள் புதைந்துள்ள படைப்பார்வத்தையும் தூண்டும். இதுபோன்ற நூல்கள் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் வயது வந்தோரும் படித்து இன்புறத்தக்கதாக அமைத்துள்ளார் நூலாசிரியர். வளரும் குழந்தைகளுக்கு அறிவைப் பகிர்ந்தளிப்போம்,நூல்களைப் பரிசளிப்போம்.

**ஆய்வுக்குப் பயன்பட்டவை**


- எஸ்.ரா. (https://www.sramakrishnan.com)
- ஜெயமோகன் (https://www.jeyamohan.in)
- சுகுமாரன், சிறார் இலக்கியம் கடந்துவந்த பாதை, பஞ்சுமிட்டாய் இலக்கிய இதழ், அக்டோபர் 2020 (https://www.panchumittai.com/2020/10/10)
- http://www.tamilvu.org/courses/degree/d061/d0612/html/d0612441.htm
- வாணிதாசன், குழந்தை இலக்கியம், வள்ளுவர் பண்ணை, சென்னை, இரண்டாம் பதிப்பு, ஜூலை 1998